


24. 01. 2026

தலைப்புச் செய்திகள்

- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இளையோருக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- நாட்டின் இளைஞர்களை வேலை வழங்குபவர்களாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் பகுதி நேர ஆசிரியர்களை சிறப்பு மதிப்பெண்கள் வழங்கி நிரந்தரமாக்க வழிவகை செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் சட்டபேரவையில் அறிவித்துள்ளார்.
- தமிழக சட்டப்பேரவை மறு தேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டது.
- செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர் ரோஜ்கர்

நாட்டில் இளையோருக்கு ஆளுமை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 18-வது கட்ட ரோஜ்கர் மேளாவில், மத்திய அரசு பணியிடங்களில் வேலை வாய்ப்பிற்கான பணி நியமன ஆணைகளை 61 ஆயிரம் இளையோருக்கு வழங்கும் திட்டத்தை காணொலி மூலம் இன்று தொடங்கிவைத்து பிரதமர் பேசினார்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பு உருவாக்கத்தை உறுதி செய்யும் வகையில் உலக நாடுகளுடன் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருப்பதாக அவர் கூறினார்.

மின்னணுவியல், மருந்தியல், தடுப்பூசிகள் பாதுகாப்பு வாகன உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நாடு அதீத வளர்ச்சி கண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இரு மடங்காக அதிகரித்த ஒரே பொருளாதார நாடாக இந்தியா திகழ்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

அந்நிய நேரடி முதலீட்டின் மூலம் 100 நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்துவருவதை பிரதமர் குறிப்பிட்டார்.

ரோஜ்கர் மேளா மூலம் இதுவரை லட்சக்கணக்கான இளையோர் பல்வேறு அரசு துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 45 இடங்களில் நடைபெற்ற முகாம்களில் பல்வேறு அமைச்சகங்களில் உள்ள துறைகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

************

எல்.முருகன்

திருவள்ளுர் மாவட்டம் ஆவடியில் பணிநியமன ஆணைகளை வழங்கி பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் நாட்டில் இளையோர் வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலை அளிப்பவர்களாக உருவாக வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

இம்முகாமில் பணி ஆணைகளை பெற்றுக்கொண்ட இளையோர் பேசுகையில்

வாய்ஸ்

************

சந்திரசேகர் பெம்மசானி

சிவகங்கை மாவட்டம் இலுப்பகுடியில் 400க்கும் மேற்பட்டோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி பேசிய மத்திய தகவல் தொடர்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி இந்நியமனங்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்றதாக குறிப்பிட்டார்.

2047ஆம் ஆண்டு வளர்ச்சி அடைந்த பாரத இலக்கை எட்டுவதில் இளையோரின் பங்கை அமைச்சர் எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் இந்தியா 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக விரைவில் உருவெடுக்கும் என கூறினார்.

பாதுகாப்புத்துறை உற்பத்தி ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாயாக தற்போது அதிகரித்துள்ளதை எடுத்துரைத்த அமைச்சர், கடந்த 2014-ம் ஆண்டு 680 கோடியாக இருந்த பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி தற்போது 23 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

அமைச்சரிடமிருந்து பணிநியமன ஆணைகளை பெற்றுக்கொண்ட இளையோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

-----------வாய்ஸ்---------

************

மன்-கி-பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 130-வது முறையாக நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, mygov இணையதளம், newsonair செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து பிரதமர் உரையின் தமிழாக்கம் காலை 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இடம்பெறும்.

************

கிரிராஜ்சிங்

நாட்டின் ஜவுளித்துறை கடந்த 10 ஆண்டுகளில் அதிக வேலை வாய்ப்புடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை

எட்டியுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 74ஆவது இந்திய சர்வதேச ஜவுளி கண்காட்சியில் உரையாற்றிய அவர், 2025-ம் ஆண்டில் உள்நாட்டு சந்தை 13 லட்சம் கோடி ரூபாயாக வளர்ச்சியடைந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

ஜவுளித்துறையில் உள்ள பல்வேறு இடர்பாடுகளை களைய மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைபடுத்தியதாக குறிப்பிட்டார்.

************

தேசிய பெண் குழந்தைகள் தினம்

தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பெண் குழந்தைகளுக்கான உரிமைகள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்ட செய்தியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு மகளிர் மேம்பாட்டு திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து நம் நாட்டை வளர்ச்சி பாதையில் முன்னெடுத்து செல்வதாக கூறியுள்ளார்.

ராணி லட்சுமிபாய், ராணி வேலுநாச்சியார், உட்பட பெருமைமிக்க மகளிர் சக்திகள் ஒவ்வொரு இந்தியரின் இதயத்தில் நிலைத்திருப்பதாக குறிப்பிட்டார்.

************

மோட்டார் சைக்கிள் பேரணி

இந்திய கடலோர காவல்படையின் 50ஆவது நிறுவன தினத்தை முன்னிட்டு சென்னை கடலோர காவல்படை கிழக்கு மண்டலம் சார்பிலான, 50 வீரர்கள் பங்கேற்ற ஆயிரத்து 500 கிலோ மீட்டர் தூர மோட்டார் சைக்கிள் பேரணிக்கு சென்னையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நாட்டின் கடல்சார் நலன் பாதுகாப்பு மற்றும் கடல்பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய கடலோர காவல்படையின் பங்கை எடுத்துக்காட்டும் வகையிலான இப்பயணம் தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டிணத்திலிருந்து தொடங்கி சென்னையில் நிறைவடைந்தது.

************

சட்டப்பேரவை

தமிழ்நாட்டில் சத்துணவு, அங்கன்வாடி, கிராம ஊராட்சி செயலாளர்களின் ஓய்வூதியம் 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் பணிநிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபாய் இரண்டு லட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர், தூய்மை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மூன்றாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

அரசு பள்ளிகளில் காலிப்பணியிடங்களை நிரப்பும்போது பகுதி நேர ஆசிரியர்களுக்கு சிறப்பு மதிப்பெண் அளித்து

அவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக வர வழிவகை செய்யப்படும் என தெரிவித்தார்..

சமூகபாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவினரை சேர்ந்த ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிட்டார்.

வாய்ஸ்

முன்னதாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய முதலமைச்சர் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் அரசின் சாதனைகளால் தமிழகம் தலை நிமிர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நம் மாநிலத்தின் வளர்ச்சியை பிற மாநிலங்கள் தலைதூக்கி பார்ப்பதாக குறிப்பிட்டார்.

ஆட்சி பொறுப்பேற்ற போது அனைத்து துறைகளிலும் பின்தங்கியிருந்த தமிழகம் தற்போது முதன்மை அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அரசுஊழியர்களின் 23 ஆண்டுகால கோரிக்கைகளை ஏற்று உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்பட்டதை குறிப்பிட்ட முதலமைச்சர் மகளிர் உரிமைத்தொகை அரசு ஊழியர்களின் அகவிலைப்படி உயர்வு, மகளிர் சுயஉதவிக்குழு கடன், மகளிர் விடியல் பயணம் உள்ளிட்ட அரசின் சாதனை திட்டங்களை பட்டியலிட்டார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளதாக கூறிய அவர், அரசின் சாதனைகளை எதிர்கட்சிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றார்.

மீண்டும் திமுக-தான் ஆட்சிக்கு வரும் என்று உறுதிபட கூறி முதலமைச்சர் தமது உரையை நிறைவு செய்தார்.

இந்நிலையில் அஇஅதிமுக உறுப்பினர்கள் யாரும் இன்று பேரவைக்கு வராமல் புறக்கணித்தனர்.

************

ஒத்திவைப்பு

சட்டப்பேரவை கூட்டத்தொடர் மறு தேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய் கிழமை தொடங்கிய சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடைந்தது.

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி தனி அலுவலர்கள் பதவிக்காலத்தை மேலும் 6 மாதத்திற்கு நீட்டிக்க வகை செய்யும் மசோதா இன்று பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

பிச்சை எடுப்பதை தடுக்க வகை செய்யும் மசோதா

கல்வி கட்டணத்தை சீரமைக்க வகை செய்யும் மசோதா உள்ளிட்டவை பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டன.

************

************

இருவரி

தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் அரசு அலுவலர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

குடியரசு தினத்தை முன்னிட்டு திருச்சி ரயில்நிலையத்தில் மோப்ப நாய் உதவியுடன் ரயில்வே பாதுகாப்பு படையினர் மற்றும் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயணிகளின் உடமைகளும் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அத்தியாவசிய அடையாள ஆவணங்கள் வழங்கும் சிறப்பு முகாம் வரும் 28ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் 4ஆவது புத்த கண்காட்சி வரும் 8ஆம் தேதி தொடங்க உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.மோகன சந்திரன் கூறியுள்ளார்.

10 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியின் ஒருபகுதியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

16ஆவது தாமிரபரணி நீர்வாழ் பறவைகள் கணக்கெடுக்கும் பணி நெல்லையில் இன்று தொடங்கியது.

நெல்லை தென்காசி தூத்துக்குடி மாவட்டங்களில் 250-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் இன்றும் நாளையும் இப்பணிகளை மேற்கொள்கின்றனர்.

************

தண்ணீர் திறப்பு

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் வரதமாநதி அணையிலிருந்து பாசனத்திற்காக இன்றுமுதல் தண்ணீர் திறக்கப்பட்டது.

வரும் மார்ச் மாதம் 21ஆம் தேதிவரை திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் 3 ஆயிரத்து 77 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

************

வானிலை

தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல அலை காரணமாக செங்கல்பட்டு, விழுப்புரம் கடலூர் மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழக கடலோர பகுதிகளில் இன்று சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 60 கிலோ மீட்டர் வேகம் வரை வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

கிரிக்கெட்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் வதோதராவில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது